செ.வெ.எண் : 18 நாள் : 13.03.2021

## பத்திரிக்கை செய்தி

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, தேர்தலில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் தேர்தல் செலவினங்களை மேற்பார்வையிட இந்திய தேர்தல் ஆணையம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளுக்கு கீழ்க்கண்ட 6 தேர்தல் செலவின பார்வையாளர்களை நியமித்துள்ளது.

| வ. எண். | தேர்தல் செலவின பார்வையாளர் பெயர் மற்றும் தொலைபேசி எண். | சட்டமன்ற தொகுதி எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| 1. | திரு. அமிதாப் ஷா, I.R.S., 94899 - 46723 | 111. மேட்டுப்பாளையம் |
| 2. | திரு. மகேஷ் ஜி. ஜிவாடே, I.R.S., 94899 - 46724 | 116. சூலூர் |
| | | 119. தொண்டாமுத்தூர் |
| 3. | திரு. விஜய் குமார் சிங், I.R.S., 94899 - 46725 | 117. கவுண்டம்பாளையம் |
| | | 118. கோயம்புத்தூர் வடக்கு |
| 4. | திரு. ஷஷாங் திவேதி, I.R.S., 94899 - 46726 | 120. கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | திரு. ஹித்தேந்திர பௌராவ்ஜி நினவே, I.R.S., 94899 - 46727 | 121. சிங்காநல்லூர் |
| | | 122. கிணத்துக்கடவு |
| 6. | திரு. ராம் கிருஷ்ண் கேடியா, I.R.S., 94899 - 46728 | 123. பொள்ளாச்சி |
| | | 124. வால்பாறை |

மேற்படி நியமனம் செய்யப்பட்டுள்ள தேர்தல் செலவின பார்வையாளர்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்ட வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் தேர்தல் செலவினங்களை

கண்காணிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (13.03.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் உரியவாறு கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும் எனவும், வேட்பாளர்கள், வேட்பு மனு தாக்கல் செய்யும் வரை ஆகும் செலவினங்கள் தொடர்புடைய கட்சியின் கணக்கில் வைத்திடவும், வேட்பாளர், வேட்பு மனு செய்தவுடன், செலவினங்களை வேட்பாளர் கணக்கில் சேர்க்கவும் தெரிவிக்கப்பட்டது. பறக்கும் படை அலுவலர்கள், செலவினங்களை கண்காணித்திட நியமிக்கப்பட்ட குழுக்கள், இப்பணியினை முறையாக கண்காணித்திட தெரிவிக்கப்பட்டது. வேட்பாளர்கள், இதற்கென புதிய வங்கிக் கணக்கு ஆரம்பித்து அதன் மூலமே செலவினங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான இரசீதுகளை ஆய்வின் போது காண்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. வங்கிகள், அதிக அளவிலான பணப் பரிவர்த்தனை விவரங்களையும், ரூ.1 லட்சத்திற்கும் மேல் நடைபெறும் பணப் பரிவர்த்தனைகளை மாவட்ட தேர்தல் அலுவலருக்கு பட்டியலாக அனுப்பி வைத்திட தெரிவிக்கப்பட்டது. ரூ.10 லட்சத்திற்கும் மேல் வங்கியிலிருந்து எடுக்கும் நிலையில் அந்த விவரத்தினை உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் வருமான வரித்துறைக்கு தகவல் தெரிவித்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. ATM இயந்திரங்களுக்காக பணம்வெளியில் எடுத்துச்செல்லும் போதும் அதன் சரித்தன்மையை ஆய்வு செய்திட தெரிவிக்கப்பட்டது. பறக்கும் படை அலுவலர்கள் ரூ.10 இலட்சத்திற்கும் மேலான ரொக்கம் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பரிமுதல் செய்யும் போது அதன் விவரத்தினையும் வருமான வரித்துறைக்கு தெரிவித்திட வேண்டும் என விளக்கப்பட்டது.

மதுபானங்கள் விற்பனை மற்றும் தேர்தலுக்காக மதுபானங்கள் பயன்படுத்தப்படுகிறதா எனவும் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளின் தேர்தல்

செலவினங்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்க விரும்பினால் மேலே கண்ட தேர்தல் பார்வையாளர்களுக்கு தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**